# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

**(Under Section.173 BNSS)**

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8082808

1. District மாவட்டம் : Combatore   PS காவல்நிலையம் : VQ AC   Year ஆண்டு : 2024   FIR No. மு.த.அ. எண் : 05/2024/AC/CB   Date நாள் : 10.08.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018.   Sections பிரிவுகள்: 7(b), 7(b) r/w 12
   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from நாள் முதல் : On 08.08.2024 and before.   Date to நாள் வரை
   Time Period நேர அளவு :   Time from நேரம் முதல் :   Time to நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.08.2024   Time நேரம் : 16.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Volume - II   Time நேரம் : 16.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் at about 40 km, North.
   Beat Number முறைக் காவல் எண் : —   (b) Address முகவரி : O/o. Sub Registrar, Mettupalayam, Combatore.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் —   District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. P. Kaliyarasan.   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o. Periyasamy
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு   (d) Nationality : நாட்டினம் Indian   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Inspection cell Inspector   (g) Address முகவரி : O/o. Inspection cell office, Collectorate, Combatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
① Tmt. G. Santhi, Sub-Registrar, Mettupalayam, Combatore. ② Tr. Naveenkumar S/O. Marimuthu, ③ Tr. M. Raja. S/o. Madhaiyan. Rice mill Road, Kottu-veeranpalayam, Sathya Mangalam, Erode District, ④ Tr. R. Praveenkumar S/o. Raman, IP Camera Operator, O/o. Sub Registrar, Mettupalayam Combatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted:-
Separate Sheets attached herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Smt. D. SHEELA Rank Inspr. of Police, to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Coimbatore on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
10/08

15. Date & Time of despatch to the court: 10.08.2024 @ 19.45 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. Ezhilarasi.
Rank: நிலை Inspector of Police
Vigilance and Anti-Corruption
Coimbatore.
10.08.2024

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/2024/AC/CB u/s. 7(b), 7(b) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

இன்று 10.08.2024-ம் தேதி 15.45 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.P.கவியரசன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/2024/AC/CB u/s. 7(b), 7(b) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ஆக 16.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அந்த புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், P.கவியரசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண். 153/2024/ஜ1, நாள்: 10.08.2024 அம்மா, பொருள்: திடீர் தணிக்கை - கோவை மாவட்டம் - சார்பதிவாளர் அலுவலகம், மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக. 08.08.2024-ம் தேதி மாலை 04.00 மணியவில், கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் (பொறுப்பு) ஆக பணிபுரிந்து வரும் திருமதி.சாந்தி மற்றும் அங்குள்ள ஊழியர்கள் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் பதிவு செய்வதற்கும், வில்லங்க சான்று பெறுவதற்கும் வருகை தரும் பொதுமக்களிடமிருந்தும், பத்திர எழுத்தர்களிடமிருந்தும் நேரடியாகவும் மறைமுகமாகவும், Digital Pay மூலமாகவும், ரொக்கமாகவும் பெறப்படும் லஞ்சப்பணத்தை சார்பதிவாளரது டிரைவர் திரு.ராஜா மற்றும் புரோக்கர் திரு.நவீன்குமார் ஆகியோர்கள் மூலமாக பெறுவதாகவும் அவ்வாறு பெறும் ரொக்கப்பணத்தை சார்பதிவாளர் தினமும் வீட்டுக்கு காரில் போகும்போது

அவரது டிரைவர் ராஜா சார்பதிவாளர் திருமதி.சாந்தி அவர்களிடம் கொடுப்பதாகவும் நம்பத்தகுந்த தகவல் கிடைக்கப்பெற்றது. அதனடிப்படையில் மேற்படி அலுவலகத்தை கோவை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான் கோவை ஊ.த.க.ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினருடன் அன்று மாலை சுமார் 5.00 மணிமுதல் கண்காணித்துக்கொண்டிருந்தபோது சுமார் 5.30 மணியளவில் மேற்படி அலுவலகத்திலிருந்து TN 36 BU 3040 என்ற பதிவெண்கொண்ட சிவப்பு நிற SWIFT கார் ஒன்று வெளியே வந்துகொண்டிருந்தது அதன் இடது முன்இருக்கையில் சார்பதிவாளர் திருமதி.சாந்தி அவர்கள் அமர்ந்திருந்தார். மேற்படி காரை பின்னால் பெயர்கேட்டு தெரிந்துகொண்ட திரு.ராஜா என்பவர் ஓட்டி வந்தார். உடனே சார்பதிவாளர் திருமதி.சாந்தி புறப்பட்டுச்சென்ற காரை அலுவலகத்தின் நுழைவாயிலில் எனது தலைமையிலான சோதனைக்குழுவினரால் நிறுத்தப்பட்டு, மேற்படி காரின் இடதுமுன் இருக்கையில் அமர்ந்திருந்த மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் திருமதி.சாந்தி என்பவரிடம் நான் என்னையும் என்னுடன் வந்த ஊ.த.க. காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினரை அறிமுகப்படுத்திக்கொண்டபின் திடீர் சோதனைசெய்ய வந்திருக்கும் விபரம் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி கார் அலுவலக வளாகத்தினுள் வலதுபுறமிருந்த பார்க்கிங் பகுதியில் நிறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து டிரைவர் திரு.ராஜாவை காரின் அருகே இருக்குமாறு அறிவுறுத்தியபின்னர் சார்பதிவாளர் திருமதி.சாந்தி அவர்களை அலுவலகத்திற்குள் அழைத்து செல்லப்பட்டது. அலுவலகத்தின் பிரதானஅறையில் இரண்டு பெண்கள் உட்பட மொத்தம் எட்டு நபர்கள் இருந்தனர். இரண்டு பெண்களில் ஒருவரை விசாரிக்க அவர் தனது பெயர் திருமதி.மணி, க/பெ.வெங்கடாசலம் என்றும் இவர் கடந்த 10 வருடங்களாக அவ்வலுவலகத்தில் வில்லங்கச்சான்று தொடர்பாக சிறுசிறு வேலைகளை செய்துவருவதாகவும் அதற்கு வாரம் ரூ.2000/- சம்பளமாக சார்பதிவாளர்கள் தருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவரிடம் பணம் பற்றிக்கேட்க அவர் தன்னிடமிருந்த ரூ.220/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதுகுறித்து அவரிடம் கேட்க அது தனது சொந்தப்பணம் என்றும் அதை தனது கைச்செலவிற்கு வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். எனவே அப்பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து அங்கிருந்த

மற்றொரு பெண்ணை விசாரிக்க அவர் தனது பெயர் திருமதி.பாரதி, க/பெ.தனபிரகாசம் என்றும் தான் கடந்த இரண்டு மாதங்களாக அவ்வலுவலகத்தில் ஆவணங்களுக்கு சீல் வைக்கும் வேலையை செய்துவருவதாகவும் அதற்கு சம்பளமாக சார்பதிவாளர்கள் இருவரும் தினம் ரூ.500/- தருவார்கள் என்றும் தெரிவித்தார். பின்னர் அங்கிருந்தவர்களை விசாரித்ததில் அவர்களில் மூன்றுபேர் அவ்வலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.பரசுராமன், தகவல் தொகுப்பு பணியாளராக பணிபுரியும் திரு.R.முத்துசெல்வன் மற்றும் IP கேமரா இயக்குபவராக பணிபுரியும் திரு.R.பிரவீன்குமார் என்பதும் தெரியவந்தது. அங்கிருந்த மற்றவர்களில் தனிநபர்களான (1).திரு.K.விஜயகுமார், த/பெ.கருப்பண்ணன், (2).திரு.D.மகேந்திர சிங், த/பெ.தன்ராம்சிங் (தனிநபர்), (3).திரு.சந்தர் சிங், த/பெ.அர்ஜுன் சிங் (திருப்பூரை சேர்ந்த பத்திர எழுத்தர்) என்பதும் தெரியவந்தது. பின்னர் சார்பதிவாளர் பயன்படுத்திய காரை டிரைவர் திரு.ராஜாவின் உதவியுடன் திறந்து சார்பதிவாளர் முன்னிலையில் சோதனை செய்யததில் சார்பதிவாளரது கைப்பை, உணவுப்பை மற்றும் ஒரு பிளாஷ்டிக் கவர் ஆகியவை இருந்தது. மேற்படி காரையும் சார்பதிவாளரது உடமைகளையும் சோதனைசெய்ததில் சார்பதிவாளரது கைப்பையில் ரூ.1,250/- ரொக்கம் மற்றும் கருப்புநிற VIVO Y56 5G Model செல்போன் ஆகியவை இருந்தது. மேற்படி பணம் குறித்து சார்பதிவாளரிடம் கேட்க அது தனது சொந்தப்பணம் என்றும் அதில் ரூ.1000/-மட்டும் பணம் கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டிருப்பதாகவும் மீதி பணம் சில்லறையாக இருந்ததால் அதுகுறித்து எந்த பதிவும் செய்யவில்லை எனவும் தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.1,250/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னா சார்பதிவாளரது டிரைவரை விசாரிக்க அவர் தான் சார்பதிவாளரது தூரத்து உறவினர் என்று தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்த ரூ.2,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து கேட்க அந்த பணத்தை சார்பதிவாளர் கூறியதின்பேரில் சுந்தரம் டைப் ஆபீசில் வேலை செய்யும் விஷ்ணுவிடமிருந்து இன்று பதிவுசெய்யப்பட்ட 3 ஆவணங்களுக்காக வாங்கிவைத்ததாக தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.2,500/- லஞ்சப்பணம் என்பதனால் அது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி டிரைவர் ராஜாவிடம்

செல்போன் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்த சில்வர்நிற VIVO Y200 Pro 5G Model செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். பின்னர் அவ்வலுவலகத்தின் வெளியே பார்வையாளர் இருக்கையில் அமர்ந்திருந்தவரை விசாரிக்க அவரது பெயர் திரு.வடிவேல், த/பெ.கிருஷ்ணசாமி என்றும் அவர் மேற்படி திருப்பூர் பத்திர எழுத்தருடன் வந்ததாக தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்த ரொக்கம் ரூ.30,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அப்பணம் அவரது சொந்தப்பணம் என்றும் தான் மேற்படி பத்திரஎழுத்தரின் நண்பர் என்றும் தனக்கும் அவ்வலுவலகத்திற்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்று தெரிவித்தார். எனவே அப்பணம் அவரிடமே திருப்பிக்கொடுக்கப்பட்டது. பின்னர் மேற்படி பத்திர எழுத்தர் திரு.சந்தர் சிங் என்பவரை விசாரிக்க அவர், கடந்த 26.07.2024-ம் தேதி அவ்வலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட தனது வாடிக்கையாளர் திரு.மகேந்திரசிங் என்பவரது செட்டில்மெண்ட் ஆவணத்திற்கான பத்திர எண்.9651/2024-க்கான தனிமனை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதில் சதுரடி ஒன்றுக்கு ரூ.359/- என மதிப்பினை நிர்ணயம் செய்யப்பட்டு சார்பதிவாளர் திருமதி.சாந்தி என்பவரால் மதிப்பு நிர்ணயம் செய்து ஆணையிடப் பட்டதென்றும், அதனடிப்படையில் குறைவு முத்திரைத்தீர்வையாக ரூ.30,030/- மற்றும் பதிவுக்கட்டணம் ரூ.8,580/- என மொத்தம் ரூ.38,610/- செலுத்தவேண்டுமென சார்பதிவாளர் தெரிவித்ததாகவும் அதுகுறித்து தான் கணக்கு போட்டுபார்த்தபின்னர் குறைவு முத்திரைத்தீர்வை அதிகமாக இருப்பதை 29.07.2024-ம் தேதி தெரிவித்ததாகவும் அதற்கு சார்பதிவாளர் திருமதி.சாந்தி நேரில் வருமாறு தெரிவித்ததின்பேரில் தான் 08.08.2024-ம் தேதி அவ்வலுவலகம் வந்து காத்திருந்ததாகவும் தெரிவித்தார். மேலும் கடந்த 26.07.2024-ம் தேதியன்று ஆவணப்பதிவின்போது சார்பதிவாளர் திருமதி.சாந்தி மேற்படி ஆவணப்பதிவிற்காக ரூ.2,00,000/- லஞ்சம் கேட்டதாகவும் பார்ட்டியால் அவ்வளவு பணம் தரமுடியாதென்று தெரிவித்தால் பார்ட்டியே சார்பதிவாளர் திருமதி.சாந்தியிடம் பேசியதாகவும் உடனே அவர் ரூ.70,000/-ஐ கொடுத்தால் தான் ஆவணப்பதிவு செய்வேன் என்று சொன்னதால் பார்ட்டி திரு.D.மகேந்திரசிங் அவரிடமிருந்து ரொக்கம் ரூ.50,000/-ஐ சார்பதிவாளரிடம் கொடுத்ததாகவும் மீதி பணம் ரூ.20,000/-ஐ

கொடுத்தால்தான் சார்பதிவாளர் பதிவுசெய்யப்பட்ட ஆவணத்தை தருவேன் என்று சொல்லிவிட்டதால் தான் பார்ட்டியிடமிருந்த பணம் அனைத்தையும் கொடுத்துவிட்டதாகவும் பணம் எதுவும் கையில் இல்லை எனத்தெரிவித்ததால், சார்பதிவாளர் மேற்படி பாக்கித்தொகை ரூ.20,000/-ஐ தனது டிரைவர் ராஜாவிற்கு GPay பண்ண சொன்னதின்பேரில் தான் தனது GPay மூலம் கடந்த 26.07.2024-ம் தேதி மாலை சுமார் 5 மணியளவில் ரூ.20,000/-ஐ அனுப்பியதாகவும் தெரிவித்தார். இதுகுறித்து மேற்படி திரு.மகேந்திர சிங் என்பவரை விசாரிக்க அவர் தான் சார்பதிவாளர் திருமதி.சாந்திக்கு அவர் கேட்டதின்பேரில் ரொக்கமாக பணம் ரூ.50,000/- கொடுத்ததையும் தனது பத்திர எழுத்தர் ரூ.20,000/-ஐ GPay மூலம் அனுப்பியதையும் தெரிவித்தார். மேலும் மேற்படி பத்திர எழுத்தர் திரு.சந்தர் சிங்கிடம் பணம் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்த ரூ.700/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து கேட்க அது அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால் அந்தப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி மகேந்திரசிங்கிடம் பணம் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்த ரூ.35,000/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்க அவர் சார்பதிவாளர் தெரிவித்தபடி குறைவு முத்திரைத்தீர்வைக்கான கட்டணத்தை செலுத்துவதற்காக கொண்டுவந்த பணம் என்று தெரிவித்ததால் அப்பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து அங்கிருந்த திரு.விஜயகுமார் என்பவரை விசாரிக்க தான் கடந்த 2017-ம் தேதி முதல் அவ்வலுவலகத்தில் ஆவணப்பதிவிற்கு வரும் நபர்களை புகைப்படம் எடுத்தல், ஆவணங்களை தைத்துகொடுப்பது போன்ற வேலைகளை செய்வதற்கு உதவியாக இருந்து வருவதாகவும், அதற்கு சம்பளமாக வாரம் ரூ.10,000/-ஐ சார்பதிவாளர் திருமதி.சாந்தி அவர்களது அறிவுரைப்படி அவ்வலுவலகத்தில் சார்பதிவாளர் திருமதி.சாந்தி அவர்களுக்கு உதவியாக இருந்து வரும் நவீன்குமார் என்பவர் தனக்கு ரொக்கமாகவோ GPay மூலம் அனுப்புவாரெனவும், மேற்படி நவீன்குமார் அவ்வலுவலகத்தில் பத்திரப்பதிவுக்காக வரும் பத்திர எழுத்தர்களிடம் பத்திர பதிவு செய்து கொடுப்பதற்காக சார்பதிவாளர்களது உத்தரவுப்படி தினம் தினம் பணம் வசூல் செய்வாரெனவும் தெரிவித்தார். அவ்வாறு வசூல் செய்யும் பணத்திலிருந்துதான் தனக்கு GPay மூலம் பணம்

அனுப்புவாரெனவும் தெரிவித்தார். இதுசம்மந்தமாக திரு.விஜயகுமாரிடமிருந்து வெள்ளை நிற Redmi 10 Prime Model செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். அதனைத்தொடர்ந்து பிரதான அறையிலிருந்த திரு.பரசுராமன் என்பவரை விசாரிக்க தான் அவ்வலுவலகத்தில் கடந்த 2019-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வந்தததாகவும், கடந்த 2024-ம் வருடம் ஜுன் மாதத்தில் உதவியாளராக பதவிஉயர்வு பெற்று மேற்படி அலுவலகத்தில் தொடர்ந்து பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்த ரூ.560/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் இன்று தான் 1050/-ஐ கொண்டுவந்ததாகவும், தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்ததாகவும், செலவு போக மீதம் ரூ.560/-வைத்துள்ளதாக தெரிவித்தார். இது குறித்து பணம் கையிருப்பு பதிவேடானாது சரிபார்க்கப்பட்டு அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் உதவியாளர் பரசுராமனிடம் செல்போன் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்த நீலநிற VIVO T1 Pro V2 153 Model Dual sim எடுத்து ஆஜர் செய்தார். அதனைத்தொடர்ந்து திரு.R.பிரவீன்குமார் என்பவரை விசரிக்க தான் கடந்த 2022-ம் வருடம் பிப்ரவரி மாதம் முதல் அவ்வலுவலகத்தில் IP Camera Operator-ஆக ZIGMA என்ற நிறுவனத்தின் மூலம் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வருவதாகவும், தான் பத்திரப்பதிவு தொடர்பாக CD போடுவது மற்றும் Computer தொடர்பான அனைத்து வேலைகளையும் செய்து வருவதாக தெரிவித்தார். மேற்படி திரு.பிரவீன்குமாரிடம் பணம் குறித்து கேட்க தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். மேலும் மேற்படி பிரவீன்குமாரிடம் செல்போன் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்த கருப்பு நிற VIVO 1920 Model செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். அதனைத்தொடர்ந்து திரு.முத்துச்செல்வன் என்பவரை விசாரிக்க அவர் தான் அவ்வலுவலகத்தில் கடந்த 2022-ம் வருடம் டிசம்பர் மாதம் முதல் Data Entry Operator-ஆக ZIGMA என்ற நிறுவனத்தின் மூலம் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வருவதாகவும், தான் அவ்வலுவலகத்தில் பதிவுசெய்யப்படும் ஆவணங்களை Upload செய்யும் பணியை செய்துவருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க தன்னிடமிருந்த பணம் ரூ.50/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து

கேட்க அது தனது சொந்தப்பணம் என்று தெரிவித்தார். எனவே அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி திரு.முத்துச்செல்வனிடம் செல்போன் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்த இளம் நீலநிற OPPO F21 Pro 5G Model செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். இதற்கிடையில் அவ்வலுவலகத்திற்குள் வந்த திரு.விஷ்ணு என்பவரை விசாரிக்க அவர், தான் சுந்தரம் டைப் ஆபீஸிலிருந்து தனது மாமா திரு.பாபு என்பவர் அவ்வலுவலகத்தில் ரெடியாக உள்ள பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களை வாங்கி வருமாறு அனுப்பியதின்பேரில் அங்கு வந்திருப்பதாக தெரிவித்தார். மேலும் மேற்படி ஆவணப்பதிவிற்காக தான் 08.08.2024-ம் தேதி மாலை சுமார் 5.15 மணியளவில் தனது மாமா, சார்பதிவாளர் திருமதி.சாந்தி அவர்களிடம் கொடுக்குமாறு தன்னிடம் கொடுத்தனுப்பிய ரூ.2,500/-ஐ கொண்டுவந்து சார்பதிவாளர் அவர்களிடம் கொடுக்கும்படி சொன்னதின் பேரில் தான் அவ்வலுவலகம் வந்து அலுவலகத்தின் பார்வையாளர் பகுதியில் நின்றிருந்த சார்பதிவாளர் அவர்களிடம் மேற்படி பணத்தை கொடுத்தபோது அவர் அப்பணத்தை அவரது டிரைவர் திரு.ராஜா அவர்களிடம் கொடுக்கச்சொல்லயிதாகவும் தானும் அவ்வாறே பார்வையாளர் பகுதியிலிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த திரு.ராஜா அவர்களிடம் கொடுத்ததாகவும் தெரிவித்தார். இதுகுறித்து அவ்வலுவலக உதவியாளர் திரு.பரசுராமனிடம் விசாரிக்க அவர் அவ்வலுவலகத்தில் வைக்கபட்டிருந்த Document Return Box-ல் வைக்கப்பட்டிருந்த 08.08.2024-ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களான (i).ஆவண எண்கள்.10121/2024, 10122/2024 மற்றும் 10126/2024 ஆகிய ஆவணங்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ஆவணங்கள் திரு.விஷ்ணுவிடம் ஒப்படைக்கப்பட்டன. அதனைத்தொடாந்து திடீர்சோதனையின்போது பெறப்பட்ட செல்போன்கள் அனைத்தும் ஒவ்வொன்றாக / தனித்தனியாக அவற்றிற்குரியவர்களின் உதவியுடன் உரிய ரகசிய குறியீடுகளின் (Pass Word) மூலம் GPay, Phone Pe மற்றும் Whats APP ஆகிய செயலிகள் திறக்கப்பட்டு அதில் பதிந்திருந்த பதிவுகள் அனைத்தும் ஆராயப்பட்டன. அதில், முதலில் சார்பதிவாளர் திருமதி.சாந்தி அவர்களின் கருப்புநிற VIVO Y56 5G Model செல்போன் ஆராயப்பட்டது. மேற்படி செல்போனின் IMEI (SIM Slot-1) No.865279064340254 மற்றும் IMEI (SIM

Slot-2) No.865279064340247 ஆகும். மேலும் PhonePe No.9786898493 பதிவுகளை ஆராய்ந்து பார்த்ததில் கடந்த 27.05.2023 தேதி முதல் 08.11.2023-ம்தேதி வரையில் இவரது டிரைவர் திரு.ராஜா என்பவரின் (Santhosh Travels) PhonePe No.9442785068-லிருந்து அனுப்பப்பட்ட ரூ.2,14,000/- மதிப்புடைய 9 எண்ணிக்கையிலான பதிவுகளும், திருமதி.சாந்தி அவர்களின் Whats app Chats-ஐ பார்வையிட புரோக்கர் நவீன்குமார் என்பவரின் GPay மூலம் திருமதி.சாந்தி என்பவரின் மருமகள் ஸ்வேதாவின் (Vaibhav)-வின் செல்நம்பர்/ GPay No.9990420427-க்கு அனுப்பப்பட்ட ரூ.89,000/- மதிப்புடைய 6 எண்ணிக்கையிலான பதிவுகள் காணப்பட்டன. இதுதொடர்பாக 1 முதல் 11 வரையிலான copy-கள் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வலுவலகத்தின் அன்றாடம் மேற்கொள்ளப்படும் ஆவணப்பதிவுகளுக்காக வசூலிக்கப்பட்ட தொகை, செலவின விபரம் மற்றும் நிலுவையிலுள்ள விபரங்கள் எழுதப்பட்ட 1 முதல் 3 பக்கங்கள் கொண்ட தாள்களின் Photo Copy-கள் தொடர்பாக அவரது மருமகள் திருமதி.சுவேதாவுக்கும் அனுப்பப்பட்ட Whats APP பரிவர்த்தனைகளும் காணப்பட்டன. மேற்படி அனைத்து copy-களிலும் திருமதி.சாந்தி அவர்களின் Whats APP Chats-கள் தனது செல்போனிலிருந்து எடுக்கப்பட்டவை என எழுதி அவற்றின் பக்கத்திற்கு பக்கம் கையொப்பம் செய்துள்ளார். மேற்படி கையொப்பம் செய்யப்பட்ட copy-கள் அனைத்தும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. மேலும் சார்பதிவாளரது GPay பதிவுகளை ஆராயும்பொருட்டு ரகசிய குறியீட்டு எண்ணை தெரிவிக்குமாறு கேட்டபோது சார்பதிவாளர் தனக்கு மறந்துவிட்டதாக தெரிவித்து கூற மறுத்துவிட்டார். இருப்பினும் அதற்கான பணபரிவர்த்தனை விபரங்களை சேகரிக்கும் பொருட்டு சாார்பதிவாளரிடம் அவரது பெயரிலும் அவரது குடும்பத்தினர் பெயரிலும் உள்ள வங்கிக்கணக்குகளின் விபரம் குறித்து கேட்டபோது தனக்கு State Bank of India, Tanjore Branch A/c. No.10922342568 மற்றும் Karur Vysya Bank, Sathyamangalam Branch A/c.No.1188177000002198 ஆகிய கணக்குகளின் விபரம் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து சார்பதிவாளரின் டிரைவர் திரு.ராஜா என்பவரின் சில்வர்நிற VIVO Y200 Pro 5G Model செல்போன் ஆராயப்பட்டது. மேற்படி செல்போனின் IMEI (SIM Slot-1)

No.863580079532716 மற்றும் IMEI (SIM Slot-2) No.863580079532708 ஆகும். அதன் Whats APP No. 9442785068-ன் பதிவுகளை ஆராய்ந்துபார்த்ததில் கடந்த 27.06.2024-ம் தேதி முதல் 07.08.2024-ம் தேதி வரையில் அவ்வலுவலகத்திற்கு வழக்கமாக ஆவணப்பதிவிற்கு வருபவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டதொகை, செலவின விபரம் மற்றும் பத்திர எழுத்தர்களிடம் நிலுவையிலுள்ள தொகை விபரங்கள் எழுதப்பட்ட தாளின் Photo Copy-கள் தொடர்பாக இவருக்கும் மற்றும் திரு.நவீன்குமார் என்பவருக்கும் இடையேயான 1 முதல் 59 பக்கங்கள் கொண்ட Whats APP Chats-கள் காணப்பட்டன. மேலும் மேற்படி தாளில் நிலுவை தொகைள் வசூல் செய்ய வேண்டி பெயர் குறிப்பிட்டிருந்த நபர்களை பற்றி கேட்டபோது, மேற்படி நபர்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வழக்கமாக பத்திர பதிவிற்கு வரும் பத்திர எழுத்தர்கள் என்று தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து அதன் GPay No.9442785068-ன் பதிவுகளை ஆராய்ந்துபார்த்ததில் கடந்த 10.03.2023-ம் தேதி முதல் 08.08.2024-ம்தேதி வரையில் புரோக்கர் திரு.நவீன்குமார் என்பவரது கணக்கிலிருந்து 1 முதல் 27 பக்கங்கள் கொண்ட மொத்தம் ரூ.7,58,050/- மதிப்பிலான தொகை அனுப்பப்பட்டுள்ளது. மேலும் Phone Pe மூலம் சார்பதிவாளர் திருமதி.சாந்தி அவர்களுக்கு அனுப்பப்பட்ட மற்றும் 5 பத்திர எழுத்தர்களிடமிருந்து பெறப்பட்ட பணபரிவர்த்தனை விபரங்கள் அடங்கிய 1 முதல் 33 வரையிலான பக்கங்கள் கொண்ட copy-கள் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி அனைத்து copy-களிலும் திரு.ராஜா என்பவர் தனது GPay-விலிருந்து நகல் எடுக்கப்பட்டவை என எழுதி அவற்றின் பக்கத்திற்கு பக்கம் கையொப்பம் செய்துள்ளார். மேற்படி கையொப்பம் செய்யப்பட்ட copy-கள் அனைத்தும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. அதனைத்தொடர்ந்து சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.பரசுராமன் என்பவரின் நீலநிற VIVO T1 Pro V2 153 Model Dual sim செல்போன் ஆராயப்பட்டது. மேற்படி செல்போனின் IMEI (SIM Slot-1) No.868764069823278 மற்றும் IMEI (SIMSlot-2) No.868764069823260 ஆகும். அதன் Whats APP No.9994988823-ன் பதிவுகளை ஆராய்ந்துபார்த்ததில் திரு.நவீன்குமாரது Whats APP

No.6379499954 லிருந்து கடந்த 16.12.2023 மற்றும் 11.05.2024 ஆகிய தேதிகளில் SFT Filing Fee-க்கு Aakash Consulting TIN FC NSDL Centre-9345966986-க்கு நவீன்குமார் GPay மூலம் செலுத்திய முறையே ரூ.4,000/- மற்றும் ரூ.9,000/-க்கான Screen Shot அனுப்பியது தொடர்பான பதிவுகள் மற்றும் 01.09.2023-ம் தேதி ரூ.23,000/- திரு.நவீன்குமார் GPay மூலம் திரு.பரசுராமனுக்கு அனுப்பிய Screen Shot தொடர்பான பதிவுகளும் காணப்பட்டன. மேலும் மேற்படி Screen Shot-களை சார்பதிவாளர் திருமதி.சாந்தி அவர்களின் உத்தரவுப்படி நவீன்குமார் அனுப்பியிருக்கும் விபரமும் தெரியவருகிறது. இது தொடர்பாக 1 முதல் 12 வரையிலான copy இணைக்கப்பட்டுள்ளது. மேலும் திரு.பரசுராமனின் GPay No.9994988823-ன் பதிவுகளை ஆராய்ந்துபார்த்ததில் கடந்த 19.11.2021-ம் தேதி முதல் 14.06.2024-ம் தேதிவரையில் புரோக்கர் திரு.நவீன்குமார் என்பவரது கணக்கிலிருந்து மொத்தம் சிறுசிறுதொகைகள் அவ்வப்போது பெறப்பட்டும் திரும்ப அனுப்பப்பட்டும் உள்ளது. இதுகுறித்து திரு.பரசுராமன் அவர்களை விசாரிக்க அவ்வலுவலகத்தில் 10 லட்சம் ரூபாய் மற்றும் 30 லட்சம் ரூபாய் ஆகியமதிப்புகளுக்கு மேல் பதிவாகும் ஆவணங்களுக்கு வருமான வரித்துறைக்கு ஆவணப்பதிவுகளை பதிவேற்றம் செய்வதற்கு IT AKASH ERODE என்ற நிறுவனத்திற்கு அவ்வலுவலகத்தின் சார்பாக ஆறு மாதங்களுக்கொருமுறை கட்டவேண்டிய கட்டணங்களை செலுத்துவதற்கு சார்பதிவாளர்களின் உத்தரவுப்படி, அவ்வலுவலகத்தில் பணம் சம்மந்தப்பட்ட விசயங்களை பராமரித்துவரும் திரு.நவீன்குமார் என்பவர் தனக்கு அனுப்பும் தொகை என்றும் அவற்றை தான் மேற்படி IT AKASH ERODE நிறுவனத்தின் ஆடிட்டரான திரு.பிரான்சிஸ் என்பவருக்கு அனுப்பவதாகவும் தெரிவித்ததார். மேலும் திரு.நவீன்குமார் GPay மூலம் அனுப்பிய தொகைகளை பற்றி விசாரிக்க அவைகள் அனைத்தும் தூய்மைபணி உட்பட பிற அலுவலக செலவிற்காக பெறப்பட்டவையென தெரிவித்தார். இதுதொடர்பாக 1 முதல் 22 வரையிலான copy இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி பெறப்பட்ட தொகைகள் அடங்கிய குறிப்புகளின் copy-களில் திரு.பரசுராமன் அவர்களால் பெறப்பட்ட பணபரிவர்த்தனை விபரங்கள் தனது செல்போனிலிருந்து எடுக்கப்பட்டவை

என எழுதி அவற்றின் பக்கத்திற்கு பக்கம் கையொப்பம் செய்துள்ளார். மேற்படி கையொப்பம் செய்யப்பட்ட copy-கள் அனைத்தும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. மேலும் இவரது வங்கிக்கணக்கு எண்களின் விபரம் குறித்து விசாரிக்க தனக்கு State Bank of India, கோயம்புத்தூர் பிரதான கிளையின் A/c.No.20340447940 என்ற கணக்கின் விபரம் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து அவ்வலுவலகத்தின் IP Camera Operator திரு.R.பிரவீன்குமார் என்பவரின் கருப்பு நிற VIVO 1920 Model செல்போன் ஆராயப்பட்டது. மேற்படி செல்போனின் IMEI-1 No.869264049494273 மற்றும் IMEI-2 No.869264049494265 ஆகும். அதன் GPay No.9994162498-ன் பதிவுகளை ஆராய்ந்துபார்த்ததில் கடந்த 05.07.2023-ம் தேதி முதல் 06.08.2014-ம் தேதிவரையில் திரு.நவீன்குமார் என்பவரின் GPay No.6379499954-லிருந்து அனுப்பப்பட்ட ரூ.4,93,700/- மதிப்புடைய 28 எண்ணிக்கையிலான பதிவுகள் காணப்பட்டன. இதுதொடர்பாக 1 முதல் 29 வரையிலான copy இணைக்கப்பட்டுள்ளது. மேலும் அவரது Whats App No.9994162498-ன் Chat-களை ஆய்வுசெய்ததில் அவ்வலுவலகத்தின் அன்றாடம் மேற்கொள்ளப்படும் ஆவணப்பதிவுகளுக்காக வசூலிக்கப்பட்ட தொகை, செலவின விபரம் மற்றும் நிலுவையிலுள்ள விபரங்கள் குறித்து அனுப்பப்பட்ட Photo Copy-களின் விபரங்கள் காணப்பட்டன. இதுதொடர்பாக பிரவீன்குமாருக்கும், திரு.நவீன்குமார் மற்றும் சார்பதிவாளர் திருமதி.சாந்தி ஆகியோர்களுக்கிடையான 1 முதல் 136 வரையிலான பக்கங்கள்கொண்ட Whats App Chat-களின் Print எடுக்கப்பட்டு அவைகள் அனைத்திலும் திரு.பிரவீன்குமார் அவர்களால் பெறப்பட்ட பணபரிவர்த்தனை விபரங்கள் தனது செல்போனிலிருந்து எடுக்கப்பட்டவை என எழுதி அவற்றின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பம் செய்துள்ளார். மேற்படி கையொப்பம் செய்யப்பட்ட copy-கள் அனைத்தும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. மேலும் இவரது வங்கிக்கணக்கு எண்களின் விபரம் குறித்து விசாரிக்க தனக்கு State Bank of India, LMW Branch பாப்பநாயக்கன்பாளையம் கிளையின் A/c.No.31661700748 என்ற கணக்கின் விபரம் தெரிவித்தார். இதுகுறித்து இவரிடம் கேட்டபோது மேற்படி தொகைகள் அனைத்தும் தான்

அவ்வலுவலகத்தில் பதிவுசெய்யப்படும் ஆவணங்களுக்காக எடுக்கப்படும் புகைப்படம் மற்றும் சில வேலைகளை செய்வதற்காக சார்பதிவாளரது அறிவுரைப்படி திரு.நவீன்குமார் தனக்கு அனுப்பும் தொகைகள் எனவும், மேலும் நவீன்குமார் அனுப்பும் தொகைகளை சார்பதிவாளர் திருமதி.சாந்தி அவர்களுக்கு எனது G-pay மூலம் அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து அவ்வலுவலகத்தின் Data Entry Operator திரு.முத்துச்செல்வன் என்பவரின் இளம் நீலநிற OPPO F21 Pro 5G Model செல்போன் ஆராயப்பட்டது. மேற்படி செல்போனின் IMEI (SIM Slot-1) No.862888052635252 மற்றும் IMEI (SIM Slot-2) No.862888052635245 ஆகும். மேலும் இவருடைய GPay No.7305058063-ன் பதிவுகளை ஆராய்ந்துபார்த்ததில் கடந்த 15.07.2023-ம் தேதி முதல் 29.02.2024-ம் தேதிவரையில் புரோக்கர் திரு.நவீன்குமார் என்பவரது கணக்கிலிருந்து சில பணபரிவர்தனைகள் காணப்படுகிறது இதுதொடர்பாக 1 முதல் 10 வரையிலான copy இணைக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வலுவலகத்திற்கு ஆவணப்பதிவிற்கு வரும் பத்திர எழுத்தர் திருமதி.சாதனா செந்தில்குமார் என்பவரது GPay No.9345459418-ன் மூலம் பல்வேறு தேதிகளில் சுமார் 500 ரூபாய் முதல் 3,500 ரூபாய் வரையிலான தொகைகள் அனுப்பப்பட்டுள்ளது. இதுகுறித்து இவரிடம் கேட்டபோது தான் அவ்வலுவலகத்தில் பதிவுசெய்யப்படும் ஆவணங்களை Upload செய்வதற்காக சார்பதிவாளரது அறிவுரைப்படி திரு.நவீன்குமார் மற்றும் மேற்படி சாதானா செந்தில்குமார் ஆகியோர் தனக்கு அனுப்பும் தொகைகள் எனத்தெரிவித்தார். இதுதொடர்பாக 1 முதல் 12 வரையிலான copy இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி பெறப்பட்ட தொகைகள் அடங்கிய குறிப்புகளின் copy-களில் திரு.முத்துசெல்வன் அவர்களால் பெறப்பட்ட பணபரிவர்த்தனை விபரங்கள் தனது செல்போனிலிருந்து எடுக்கப்பட்டவை என எழுதி அவற்றின் பக்கத்திற்கு பக்கம் கையொப்பம் செய்துள்ளார். மேற்படி கையொப்பம் செய்யப்பட்ட copy-கள் அனைத்தும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. மேலும் இவரது வங்கிக்கணக்கு எண்களின் விபரம் குறித்து விசாரிக்க தனக்கு State Bank of India, துறையூர் கிளையின் A/c.No.20326514917 மற்றும் ICICI Bank திருச்சி

தில்லைநகர் கிளையின் A/c.No.613401530719 ஆகிய இரண்டு கணக்குகளின் விபரம் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து சார்பதிவாளரது அலுவலக உதவியாளரான (தனி நபர்) திரு.விஜயகுமார் என்பவரின் வெள்ளை நிற Redmi 10 Prime Model செல்போன் ஆராயப்பட்டது. மேற்படி செல்போனின் IMEI (SIM Slot-1) No.869598056505962 மற்றும் IMEI (SIM Slot-2) No. 869598056505970 ஆகும். அதன் GPay 9698575475 பதிவுகளை ஆராய்ந்துபார்த்ததில் கடந்த 20.04.2022-ம் தேதி முதல் 02.08.2024- தேதி வரையில் புரோக்கர் திரு.நவீன்குமார் என்பவரது கணக்கிலிருந்த மொத்தம் ரூ.3,32,880/- மதிப்பிலான மொத்தம் 131 பதிவுகள் காணப்பட்டது. இதுகுறித்து அவரிடம் கேட்டபோது தான் அவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வருவதற்காக சம்பளமாக வார வாரம் சார்பதிவாளராது அறிவுரைப்படி திரு.நவீன்குமார் தனக்கு அனுப்பும் தொகைகள் என்று தெரிவித்தார். இதுசம்மந்தமாக மேற்படி 1 முதல் 135 வரையிலான copy இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி பெறப்பட்ட தொகைகள் அடங்கிய குறிப்புகளின் copy-களில் திரு.விஜயகுமார் அவர்களால் பெறப்பட்ட பணபரிவர்த்தனை விபரங்கள் தனது செல்போனிலிருந்து எடுக்கப்பட்டவை என எழுதி அவற்றின் பக்கத்திற்கு பக்கம் கையொப்பம் செய்துள்ளார். மேற்படி கையொப்பம் செய்யப்பட்ட copy-கள் அனைத்தும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. மேலும் இவரது வங்கிக்கணக்கு எண்களின் விபரம் குறித்து விசாரிக்க தனக்கு Bank of Baroda, கோபி கிளையில் A/c.No. 35560100013226 என்ற வங்கிக்கணக்கு எண் உள்ளதாக தெரிவித்தார். இதுகுறித்து இவரிடம் கேட்டபோது அவ்வலுவலகத்தில் தான் செய்யும் வேலைகளுக்கு சம்பளமாக சார்பதிவாளரது அறிவுரைப்படி திரு.நவீன்குமார் தனக்கு அனுப்பும் தொகைகள் எனத்தெரிவித்தார். மேலும் மேற்படி சார்பதிவாளர் திருமதி.சாந்தி, உதவியாளர் திரு.பரசுராமன், Data Entry Operator திரு.முத்துச்செல்வன், IP Camera Operator திரு.பிரவீன்குமார், சார்பதிவாளரது டிரைவர் திரு.ராஜா, தனிநபர்களான திரு.விஜயகுமார், திரு.விஷ்ணு ஆகியோர்களை நான் தனித்தனியாக விசாரித்து அவர்களிடம் வாக்குமூலம் பதிவுசெய்தேன். மேற்படி சார்பதிவாளர் திருமதி.சாந்தி,

உதவியாளர் திரு.பரசுராமன், Data Entry Operator திரு.முத்துச்செல்வன், IP Camera Operator திரு.பிரவீன்குமார், சார்பதிவாளரது டிரைவர் திரு.ராஜா மற்றும் திரு.விஜயகுமார் ஆகியோரை மேற்படி GPay மற்றும் Phone Pe ஆகியவற்றின் மூலம் அனுப்பப்பட்டதின் காரணம் குறித்து தனித்தனியாக விசாரித்போது அவர்கள் பெறும் தொகையினை ரொக்கமாக வாங்கி வைத்திருந்தால் விஜிலென்ஸ் ரெய்டின்போது மாட்டிக்கொள்வார்கள் என்பதால் Digital பரிவர்த்தனை செய்துகொண்டதாக தெரிவித்தனர். மேலும் சார்பதிவாளரிடம் 08.08.2024-ம் தேதியின்படி பதிவுசெய்யப்பட்ட பதிவுகளின் விபரத்தை கேட்க (i).Year 2024 Month August Account A Mettupalayam date From 08-Aug-2024 to 08-Aug-2024 (4 sheets), (ii).Year 2024 Month August IP Camera / CD Account Mettupalayam date From 08-Aug-2024 to 08-Aug-2024 (3 sheets), (iii).Year 2024 Month August Account H Mettupalayam date From 08-Aug-2024 to 08-Aug-2024 (1 sheet), (iv).Year 2024 Month August Account D Mettupalayam date From 08-Aug-2024 to 08-Aug-2024 (5 sheets), (v). Year 2024 Month August Birth / Death Cash Account Mettupalayam date From 08-Aug-2024 to 08-Aug-2024 (1 sheet), (vi).Year 2024 Month August Account B Mettupalayam date From 08-Aug-2024 to 08-Aug-2024 (1 Sheet), (vii). Year 2024 Month August Sub Division Account Mettupalayam date From 08-Aug-2024 to 08-Aug-2024 (2 Sheets), (viii).Year 2024 Month August Section 41 Account Mettupalayam date From 08-Aug-2024 to 08-Aug-2024 (6 Sheets) ஆகியவை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு சார்பதிவாளர் திருமதி.சாந்தி அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் (ix).தொகுதி எண்:128 நிரந்தரப்பணியாளர்கள் வருகைப்பதிவேடு பிப்ரவரி 2024 முதல் ஆகஸ்ட் 08.08.2024 (15 தாள்கள்), (x).ஒப்பந்தபணியாளர்கள் வருகைப்பதிவேடு ஜனவரி 2024 முதல் ஆகஸ்ட் 08.08.2024 (10 தாள்கள்), (xi).தனிநபர் பணம் கையிருப்புப் பதிவேடு 07.08.2024 மற்றும் 08.08.2024 (2 தாள்கள்) ஆகிய பதிவேடுகளின் நகல் எடுக்கப்பட்டு சார்பதிவாளர் திருமதி.சாந்தி அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு மேற்படி அவை

அனைத்தும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் கொடிநாள் வசூல் குறித்து C கணக்கு பதிவேட்டை பார்வையிட்டபோது பதிவுகள் எதுவும் காணப்படவில்லை. (xii).மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் 08.08.2024-ம் தேதிக்கான CCTV Footage-ன் பதிவிறக்கம் செய்யப்பட்ட Compact Disc-2 Nos ஆகியவை மேற்படி திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனை நடவடிக்கைகள் 08.08.2024-ம் தேதி இரவு 08.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 09.08.2024-ம் தேதி மாலை 05.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் மேற்படி திடீர் சோதனை நடவடிக்கையானது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட அலுவலக மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அலுவலக பிரிண்டரில் பிரிண்ட் எடுக்கப்பட்டது. மேற்படி தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளை இத்துடன் இணைத்துள்ளேன். அதில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து விவரங்களையும், குறிப்பிட்டுள்ளேன். மேலும் திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,500/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் சார்பதிவாளர் திருமதி.சாந்தி, உதவியாளர் திரு.பரசுராமன், Data Entry Operator திரு.முத்துச்செல்வன், IP Camera Operator திரு.பிரவீன்குமார், சார்பதிவாளரது பிரைவேட் டிரைவர் திரு.ராஜா, தனிநபர்களான திரு.விஜயகுமார், திரு.விஷ்ணு ஆகியோரது வாக்குமூலங்களையும் இத்துடன் இணைத்துள்ளேன். எனவே மேற்கண்ட முறைகேடுகளில் தொடர்புடைய 1).திருமதி.G.சாந்தி, சார்பதிவாளர், மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகம், கோயம்புத்தூர், 2).திரு.M.நவீன்குமர், த/பெ.மாரிமுத்து, 3) திரு.M.ராஜா, த/பெ.மாதையன், ரைஸ் மில் ரோடு, கோட்டுவீராம்பாளையம், சத்தியமங்கலம், கோயம்புத்தூர் மற்றும் 4).திரு.R.பிரவின்குமார், த/பெ.ராமன், IP கேமரா இயக்குபவர், மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகம், கோயம்புத்தூர் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இணைப்பு:-1).திடீர் சோதனை நடவடிக்கைகள், 2).கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,500/-, 3).கைப்பற்றப்பட்ட அலுவலக ஆவணங்கள் 1 முதல் 12 வரையிலானவை, 4).பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் 1 முதல் 7 வரையிலானவை மற்றும் 5).சார்பதிவாளர் திருமதி.சாந்தி, உதவியாளர் திரு.பரசுராமன், Data Entry Operator

திரு.முத்துசெல்வன், IP Camera Operator திரு.பிரவீன்குமார், திரு.விஜயகுமார் மற்றும் சார்பதிவாளரின் ஓட்டுநர் திரு.ராஜா ஆகியோர் பயன்படுத்தி வந்த மொபைல் போனிலிருந்த Whats App, G-Pay, PhonePe ஆகிய செயலிகளின் விபரங்கள் குறித்து போன் Display-களிலிருந்து எடுக்கப்பட்ட Photo copy-களின் பிரிண்ட் அவுட்கள். (Sdxxxx) முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாாள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். Respected Madam, I have Received the complaint on 10.08.2024 at about 15.45 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.05/2024/AC/CB u/s. 7(b), 7(b) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at about 16.30 hrs (Sd.xxxxxx) R.எழிலரசி, 10/08/2024 Inspr. V&AC, CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்களால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

10/08/2024

(R.எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.